சென்னை, இந்து சமய அறநிலையத்துறை, ஆணையர் அவர்களின் செயல்முறைகள்.

முன்னிலை:– திரு.ப.ரா.சம்பத், இ.ஆ.ப.,
ஆணையர்.

<u>செ.மு.ந.க.எண்.6094/2010/பி3, நாள் 15 .9. 2010</u>

பொருள் :– பணிப்பிரிவு – திரு.ஜெ.சிவா த/பெ. வி.ஜெகநாதன், செயல் அலுவலர் (லேட்) அலுவலக உதவியாளர் – உதவி ஆணையர் அலுவலகம், நாகப்பட்டிணம் – அலுவலக உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து உத்திரவிடப்படுகிறது.

பார்வை:–
1. இவ்வலுவலக ந.க.எண் 6094/2010/பி3/நாள் 26.5.2010 மற்றும் 21.7.2010
2. அரசு கடித (ப) எண் 505/த.வ.அ.நி (ம) செ(அநி2–1) துறை, நாள் 9.9.2010

*********

அரசாணை (நிலை) எண்.143, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யு1)துறை நாள் 11.11.98–ல் துறைத்தலைவருக்கு வழங்கப்பட்ட பணிவரன்முறை செய்யப்பட்ட அதிகாரம் அராசணை (நிலை) எண்.17, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள் 7.2.03ன் மூலம் ரத்து செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளதனைத் தொடர்ந்து, கருணை அடிப்படையில் நாகப்பட்டினம், உதவி ஆணையர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளர் பதவியில் பணியமர்த்தப்பட்ட திரு.ஜெ.சிவா என்பவரின் பணியினை அன்னார் பணியில் சேர்ந்த நாளான 2.6.2010 முற்பகல் முதல் அலுவலக உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்ய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது. ஆனால் 14.6.2004 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அரசுக் கடித எண்.17884/க்யு1/2004–2–ல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அகப்பாட்டெல்லைக்குள் வரும் பதவிகளான இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் போன்ற பதவிகளில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்பவர் பொருட்டு மட்டுமே தேர்வாணையத்தின் இசைவினை பெற்று அரசளவில் பணிவரன்முறை செய்யப்பட வேண்டும் என்றும், அலுவலக பணியிடத்திற்கான பணிநியமன அலுவலர் என்ற நிலையில் துறைத் தலைவரே பணிவரன்முறை செய்யலாம் என மேலும் பார்வை 2ல் காணும் அரசு குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய நிலையில், நாகப்பட்டிணம், உதவி ஆணையர் அலுவலகத்தில். அலுவலக உதவியாளராக கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு 2.6.2010 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வரும் திரு.ஜெ.சிவா என்பவர்

அலுவலக உதவியாளர் பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளதாலும், கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யும்போது விதித்தளர்வுகள் ஏதுமிருப்பின் அந்நேர்வு தொடர்பாக மட்டுமே அரசளவில் பணிவரன்முறை செய்ய இயலும் என்பதாலும், மேற்கண்ட நிகழ்வினை துறைத்தலைவர் அவர்களே பணிவரன்முறை செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நாகப்பட்டினம், உதவி ஆணையர் அலுவலகத்தில், அலுவலக உதவியாளராக கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு 2.6.2010 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வரும் திரு.ஜெ.சிவா என்பவர் அலுவலக உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 2.6.2010 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உத்திரவிடப்படுகிறது.

கையொப்பமிட்டுள்ளது,
ஆணையர்,

/உண்மைநகல்/உத்தரவுப்படி/

உதவி ஆணையர் (சட்டச் சோபனம்).

பெறுநர்

1) திரு.ஜெ.சிவா, அலுவலக உதவியாளர்,
உதவி ஆணையர் அலுவலகம், இந்து சமய அறநிலையத்துறை, நாகப்பட்டினம்.
(வ.எண். 2ன் மூலம்)
2) உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, நாகப்பட்டினம்.
3) பணிப்பதிவேட்டிற்கு
4–5) மிகை.